செ.வெ.எண்: 17 நாள்: 05.08.2016

# பத்திரிகைச்செய்தி

**மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் - சீர்மரபினர் நல வாரியம் - நலவாரிய உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சீர்மரபினர் இன மக்களுக்கு சீர்மரபினர் நலவாரியத்தின் மூலம் பதிவு செய்து நலவாரிய அட்டைகள் மூலம் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் விபரம் பின்வருமாறு.

**1. விபத்து ஈட்டுறுதித்திட்டத்தின் கீழ் உதவித்தொகை.** (அ) விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை ரூ.1,00,000/- (ஆ) விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.10000 முதல் 100000/- வரை 2. இயற்கை மரணம் ரூ.15,000/- 3. மச்சடங்கு செலவினம் ரூ.2,000/- 4. கல்வி உதவித்தொகை அ) 10-ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,000/- ஆ) 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.1,000/- இ) 11-ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1000/- ஈ) 12-ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,500/- (உ) 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.1,500/- (ஊ) (i) முறையான பட்டப்படிப்புக்கு ரூ.1,500/- (ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்புக்கு ரூ.1,750/- (எ) (i) முறையான பட்டமேற்படிப்பிற்கு ரூ.4,000/- (ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டமேற்படிப்பிற்கு ரூ.5,000/- (ஏ) (i) தொழில்கல்வி பட்டப்படிப்புக்கு ரூ.4,000/- (ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்புக்கு ரூ.6,000/- (ஐ) (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்புக்குரூ.6,000/- (ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்புக்கு ரூ.8,000/- (ஒ) (i) ஐ.டி.ஐ. அல்லது தொழிற்பயிற்சி படிப்புக்கு ரூ.1,000/- (ii) மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ. அல்லது தொழிற்பயிற்சிப் படிப்புக்கு ரூ1,200/- (5) திருமண உதவித்தொகை ரூ2,000/- (6) மகப்பேறு உதவித்தொகை (அ) மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் 6 மாதங்களுக்கு ரூ6,000/- (ஆ) கருச்சிதைவு/கருக்கலைப்பு ரூ3,000/- (7) மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் ரூ500/- (8) முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் ரூ1,000/-

எனவே சீர்மரபினர் நல வாரிய பதிவு பெற்ற உறுப்பினர்கள் மேற்சொன்ன திட்டங்களின் கீழான தங்களது, கோரிக்கை குறித்து புதுக்கோட்டை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை அணுகி பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அவ்வாறான கோரிக்கை குறித்து வேறு அரசு திட்டங்கள் மூலமாகவோ இதர வேறு நலவாரியத்தின் மூலம் பயன் பெற்றிருக்க கூடாது. தவிரவும் இதுவரை சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய விடுபட்ட சீர்மரபினர் இனமக்கள், புதுக்கோட்டை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடம் உடனடியாக தங்களை பதிவு செய்துகொள்ளவும் இதன்மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**